RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 86 | ஏப்ரல்.4 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில்

தாயமங்கலம், இளையான்குடி வட்டம் - சிவகங்கை மாவட்டம் 1434 ஆம் பசலி

# பங்குனிப் பெருந்திருவிழா



| | |
|---|---|
| மார்ச் 29 | கொடியேற்றம் |
| மார்ச் 30 | சிம்ம வாகனம் |
| மார்ச் 31 | சிம்ம வாகனம் |
| ஏப்ரல் 1 | குதிரை வாகனம் |
| ஏப்ரல் 2 | காமதேனு வாகனம் |

| | |
|---|---|
| ஏப்ரல் 3 | அன்ன வாகனம் |
| ஏப்ரல் 4 | பூத வாகனம் |
| ஏப்ரல் 5 | பொங்கல் வைபவம் |
| ஏப்ரல் 6 | தேரோட்டம் |
| ஏப்ரல் 7 | பால் குடம், பூப்பல்லக்கு |
| ஏப்ரல் 8 | தர்த்தவாரி |

பக்தகோடிகள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருஅருளைப்பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## மு.வெங்கடேசன் செட்டியார்
## பரம்பரை அறங்காவலர் - தாயமங்கலம்





## பாடியநல்லூர் முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலய தீமிதி திருவிழாவை முன்னிட்டு பால்குடம், கொடியேற்றுதல், காப்புகட்டுதல் துவக்க விழா

மாதவரம், ஏப்.4-
மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடிநல்லூர் ஊராட்சி பர்மா நகரில் அமைந்துள்ள அருள்மிகு முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி அம்மன் ஆலயத்தில் 61ம் ஆண்டு பங்குனி உத்திர தீமிதி திருவிழாவை முன்னிட்டு பால்குடம் மற்றும் கொடியேற்றுதல், காப்பு கட்டுதல் நிகழ்ச்சி மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்றது. திருக்கோயில் நிர்வாகிகள் ஆலய அறங்காவலர் குழு தலைவர் மீ. வே. கருணாகரன், எஸ்.கருணாகரன், வீரம்மாள், ஞானம், ராமு மற்றும் விழா குழு தலைவர் எம்.வி. புண்யசேகரன், செயலாளர் சன்முனியாண்டி, பொருளாளர் எஸ்.ஞானப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கோபூஜை, கணபதி ஹோமத்துடன் கொடியேற்றுதல் தொடர்ந்து ஆலமரம் முனீஸ்வரர் ஆலயத் திலிருந்து சுமார் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் சிரசியில் பால் குடம் ஏந்தியவாறு முக்கிய வீதிகள் வழியாக சென்று ஸ்ரீ அங்காள ஈஸ்வரி அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து

தூப தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு காப்பு கட்டுதல் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடபெற்றன. இதில் அன்னதானக் குழு தலைவர் அர்ஜுனன், செயலாளர் குணசேகரன், பார்த்திபன் உள்ளிட்ட திருக்கோயில் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பந்தலூர் வெள்ளேரி பகுதியில் வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு கைப்பந்து போட்டி நடத்தப்பட்டது.



## ஆயிரம் விளக்கு தொகுதிக்கு உட்பட்ட சூளைமேடு பகுதிகளில் அதிமுக முன்னாள் அமைச்சர் வளர்மதி பிரச்சாரம்

சென்னை, ஏப்.4-
ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடும் அதிமுக முன்னாள் அமைச்சர் வளர்மதி, சூளைமேடு சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை தொகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சரும், கட்சியின் மகளிர் அணி செயலாளருமான வளர்மதி போட்டியிடுகிறார்.

நேற்று முன்தினம் தனது பிரச்சாரத்தை தொடங்கி, கோபாலபுரம், ராயப்பேட்டை பகுதியில் வாக்கு சேகரித்தார்.

இந்நிலையில், சூளைமேடு சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அவர்களிடம் வளர்மதி பேசும்போது, ‘‘திமுக ஆட்சியில் சொத்துவரி உயர்ந்துள்ளது. அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது.

அதிமுக தேர்தல் வாக்குறுதிகளில் குறிப்பிட்டுள்ளது போல, குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா குளிர்சாதன பெட்டி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை, குடும்ப தலைவிக்கு ரூ.2 ஆயிரம் என அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற் றப்படும். தமிழகத்திலேயே முன்மாதிரி தொகுதியாக ஆயிரம் விளக்கு தொகுதியை மாற்றுவேன்’’ என்றார்.

# கிருஷ்ணகிரியில் அதிமுக பொதுக்கூட்டம்: “வலிமையான கூட்டணி நாங்கள்” - எடப்பாடி பழனிசாமி தாக்கு





கிருஷ்ணகிரி, ஏப்.. 04-
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட எடப்பாடி பழனிச்சாமி தங்களின் கூட்டணி வலிமையானது என்றும், காங்கிரஸ் கட்சி மனவருத்தத்திலேயே திமுகவுடன் இணைந்துள்ளது என்றும் கடுமையாக விமர்சித்தார்.

கிருஷ்ணகிரி கார்னேசன் திடலில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்தில், வேப்பனப்பள்ளி கேபி முனுசாமி, கிருஷ்ணகிரி அசோக் குமார், ஓசூர் பாலகிருஷ்ண ரெட்டி, ஊத்தங்கரை தமிழ்செல்வம், பர்கூர் கோவிந்தராஜன் ஆகியோர் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் பிரசாரம் செய்தார்.

பேச்சின் போது, முக ஸ்டாலின் முன்வைத்த விமர்சனங்களுக்கு பதிலளித்த அவர், “அதிமுக எந்த காலத்திலும் மற்ற கட்சிகளுக்கு அடிமையாக இருந்ததில்லை. எம்.ஜி.ஆர் தொடங்கியதும், ஜெயலலிதா வளர்த்ததும் ஆன வலுவான இயக்கம்” என்றார்.

மேலும், திமுக‑காங்கிரஸ் கூட்டணி உருவாக 20 நாட்கள் இழுபறி நடந்ததாகவும், அது மகிழ்ச்சியான கூட்டணி அல்ல என்றும் கூறினார். “ஒரே நாளில் கூட்டணி அமைத்து, உடனடியாக தொகுதி பங்கீடு, தேர்தல் அறிக்கை, வேட்பாளர் பட்டியல் என ஜெட் வேகத்தில் செயல்பட்டது அதிமுக” எனவும் அவர் தெரிவித்தார்.திமுக கூட்டணி குறித்து அவர், “புதிய கட்சிகள் இணைந்ததாக கூறுவது மாயத் தோற்றம் மட்டுமே. 2021ல் இருந்த அதே கூட்டணிதான் இப்போது உள்ளது” என விமர்சித்தார்.

மேலும், திமுக ஆட்சியில் சட்டம்ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வரிகள் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார். “அதிமுக ஆட்சியில் தான் கிருஷ்ணகிரி மாவட்டம் வளர்ச்சி பெற்றது; அரசு மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டன” என்றார்.பொதுக்கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தம்பிதுரை மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திமுக வேட்பாளர் காலில் விழுந்து வணங்கிய கும்மிடிப்பூண்டி அதிமுக வேட்பாளர்



திருவள்ளூர், ஏப்.4-
கும்மிடிப்பூண்டி அதிமுக வேட்பாளர் சுதாகர், திமுக வேட்பாளர் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள 10 சட்டப்பேரவை தொகுதிகளில் கடந்த 30ம் தேதி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 24 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தொடர் விடுமுறைக்குப் பின் 2வது நாளாக நேற்று நடைபெற்ற வேட்புமனு தாக்கலில், கும்மிடிப் பூண்டி தெ[illegible]குதியில், திமுக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜன், அதிமுக வேட்பாளர் சுதாகர், தவெக வேட்பாளர் விஜயகுமார், சுயேச்சை வேட்பாளர் ராமசந்திரரெட்டி உள்ளிட்டோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

திமுக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்த ராஜன் வேட்புமனுவை தாக்கல் செய்து விட்டு வெளியே வந்தபோது, அதிமுக வேட்பாளர் சுதாகர் வேட்புமனு தாக்கல் செய்ய அலுவலகம் உள்ளே சென்றார்.

இருவரும் நேருக்கு சந்தித்தனர். அப்போது யாரும் எதிர்பாராத வகையில், திமுக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் காலில் சுதாகர் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார். இச்சம்பவம், அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



■ மதுரை மாவட்டம், மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆரப்பாளையத்தில் 100% தவறாமல் வாக்களிப்போம், என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லையினைபேருந்துகள் மற்றும் ஆட்டோகளில் ஒட்டி பொதுமக்களுக்கு தேர்தல் தொடர்பான விவரங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை. மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., வழங்கி பொதுமக்கள் கலந்துகொண்ட விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து பங்கேற்றார்.

## ஆ.ராசா பேசியதாக வெளியான ஆடியோ சுட்டிக்காட்டி பழனிசாமி விமர்சனம்



கிருஷ்ணகிரி, எப்.4-
சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுக எம்பி ஆ.ராசா பேசியதாக ஆடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இது திமுகவில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே கிருஷ்ணகிரியில் தேர்தல் பிரச்சாரத்தின்போது அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, இந்த ஆடியாவை முன்வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: ‘‘2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில், கனிமொழியும், ஆ.ராசாவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஜெயிலில் இருந்த ஆ.ராசா ஆடியோ வெளியாகியுள்ளது. அதில், திமுகவில் கனிமொழிக்கு காட்டிய அக்கறையை ராசாவுக்கு காட்டவில்லை. சமூக நீதி பேசும் திமுகவில் சாதியப் பாகுபாடு இருக்கிறது. கலைஞர் டிவிக்கு பணம் போனதை ஒப்புக்கொள்கிறார். கருணாநிதியின் இறுதிக் காலத்தில் ஸ்டாலின் அவரை கைதியாகத்தான் வைத்திருந்தார் என்று ராசா கூறுகிறார்.

கருணாநிதியின் இறுதிகாலத்தில் ஸ்டாலினுக்கும், கனிமொழிக்கும் பிரச்னை ஏற்பட்டது அதனால்தான் இம்முறை சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கவில்லை என்கிறார். ஸ்டாலினுக்கு பெரிய மூளை இருக்குதா? டெல்லிக்கு போனால் ஆங்கிலத்தில் கிழித்துவிடுவாரா? கனிமொழியை ஒருநாளும் நம்ப மாட்டார், என்னை எப்போதும் கட்சியில் இருந்து வெளியில் தள்ளமுடியாது என்கிறார்.

ஸ்டாலின் அவரது அப்பாவை கைதி போல வைத்திருந்தார், சொந்த அப்பாவையே அப்படி வைத்தவர் நாட்டு மக்களை எப்படி வைப்பார், உண்மை செய்தி ராசா மூலம் வெளியில் வந்துவிட்டது. திமுகவின் இறுதி அத்தியாயத்தை ஸ்டாலின் எழுதுகிறார்’ என்று ராசா பேசியிருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்

## 10 பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு 10 சீட் கொடுத்த திமுக நடிகை விந்தியா நக்கல்

தாம்பரம், ஏப்.4-
பத்து பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு திமுக பத்து சீட் கொடுத்துள்ளது. மானம், ரோஷம் உள்ள திமுகவினர் இம்முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள் என்று நடிகை விந்தியா ஆவேசமாகப் பேசினார்.

தாம்பரம் தொகுதி அதிமுக வேட்பாளர் ராஜேந்திரனை ஆதரித்து நடிகை விந்தியா, கிழக்கு தாம்பரத்தில் நேற்று மாலை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: திமுகவில் தாம்பரம் தொகுதியில் ராஜாவுக்கு சீட் தராததால் அவரது ஆதரவாளர்கள் கேட்டதற்கு, ‘‘இரண்டு மூன்று முறை இருந்துட்டாரு இல்ல அதன் பிறகு என்ன’’ எனக் கேட்டு கேவலப்படுத்தி தனது சொந்தக் கட்சிக்காரர்களையே அவமானப்படுத்தியுள்ளார் டி.ஆர். பாலு.பத்து பைசாவுக்கு கூட பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு பத்து சீட்டை திமுக கொடுத்துள்ளது. திமுகவில் மானம், ரோஷம் உள்ளவர்கள் இந்த முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள். ஐந்து வருட திமுக ஆட்சியில் திமுக காரர்களே கடுப்பாகியுள்ளனர். தமிழக பெண்களின் பாதுகாப்பிற்காக அதிமுகவிற்கு வாக்கு அளிக்குமாறு கேட்கிறோம்.கொடூரமான திமுக ஆட்சி தேவையா? திமுகவை நம்பாதீர்கள். உங்களை காப்பாற்றக்கூடிய நல்ல வாய்ப்பு தான் இந்த தேர்தல். அதிமுக ஆட்சி வந்தால் மட்டுமே பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியும். தமிழகமும், தமிழக மக்களுக்கும் தலைநிமிர்ந்து ஒரு நிமிடம் யோசித்தால் திமுக இருக்காது. இந்த தேர்தலில் பல இடங்களில் அதிமுக கூட்டணியிடம் திமுக கூட்டணி தோல்வியடையும். இவ்வாறு அவர் பேசினார். இதேபோல் சோழிங்நல்லூர் தொகுதியில் போட்டியிடும் கே.பி. கந்தனை ஆதரித்து ஜல்லடியன்பேட்டையில் நடிகை விந்தியா, பிரச்சாரம் மேற்கொண்டார்.

# அமெரிக்கா இஸ்ரேல், ஈரான் போர் தாக்கம்: மார்ச்சில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி 20% உயர்வு



புதுடெல்லி, ஏப்.4-
அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக, மார்ச் மாதத்தில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி 20% அதிகரித்துள்ளது. அமெரிக்காஇஸ்ரேல், ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளது.

இதனால் கச்சா எண்ணெய் கப்பல்கள் போக்குவரத்து முடங்கி, கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. இந்நிலையில், கச்சா எண்ணெய் விலைக்கும் சுத்திகரிக்கப்பட்ட டீசல் விலைக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளி காரணமாக, மார்ச் மாதத்தில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி முந்தைய மாதத்தை விட 20% உயர்ந்துள்ளது. இருப்பினும், கப்பல் போக்குவரத்து தரவுகளின்படி, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி 8% சரிந்துள்ளது.

பொதுவாக, சுத்திகரிப்பு நிறுவனங்கள் லாபகரமான ‘கிராக் ஸ்பிரட்' மற்றும் மார்ஜின்களைப் பயன்படுத்திக் கொள்ள தங்கள் உற்பத்தி கலவையை மாற்றியமைக்கின்றன.

‘கிராக் ஸ்பிரட்' என்பது கச்சா எண்ணெய் விலைக்கும் அதிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் விலைக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கிறது.

‘மார்ஜின்' என்பது செலவுகள் மற்றும் செயல்பாட்டுத் திறனுக்குப் பிறகு சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஈட்டும் லாபத்தைக் குறிக்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்ட நிலையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும், அதன் தாக்கம் பல்வேறு எரிபொருட்களில் மாறுபட்டுள்ளது.

டீசல் மற்றும் ஜெட் எரிபொருளுக்கான கிராக் ஸ்பிரட்கள் புதிய உச்சத்தை எட்டியுள்ளன. அதேநேரம் பெட்ரோலுக்கான விலை ஓரளவுக்கு நிலையாகவே உள்ளன. கப்பல்களைக் கண்காணிக்கும் ‘கெப்லர்' நிறுவனத்தின் தரவுகளின்படி, பிப்ரவரி மாதத்தில் 107.4 கோடி பீப்பாய்களாக இருந்த டீசல் ஏற்றுமதி, மார்ச் 1 முதல் 28 வரையிலான காலத்தில் 129 கோடி பீப்பாய்களை எட்டியுள்ளது. இதனிடையே, மார்ச் மாதத்தில் இந்தியாவின் பெட்ரோல் ஏற்றுமதி 33% குறைந்து 83.1 கோடி பீப்பாய்களாக வீழ்ச்சிஅடைந்தது.



## குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னூர் நகராட்சி மார்க்கெட் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

குன்னூர் ஏப். 4-

குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னூர் நகராட்சி மார்க்கெட் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்குன்னூர் நகர திமுக அலுவலகத்தில் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கே. எம். ராஜு தலைமையில். குன்னூர் நகர திமுகச் செயலாளர் ராமசாமி அனைவரையும் வரவேற்றார்.இக்கூட்டத்தில் மார்க்கெட் சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அவைத் தலைவர் கே. போஜன், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் இரா. அன்வர் கான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## காரனோடை ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி

மாதவரம், ஏப்.4-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் காரனோடை கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் சமேத ஸ்ரீ தர்மராஜா ஆலயத்தில் 2ம் ஆண்டு பௌர்ணமி பங்குனி உத்திரம் முன்னிட்டு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி ஆலய அறங்காவலர் குழு தலைவர் டி.எம். கிருஷ்ணன் மற்றும் ஆலய நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர்கள் மற்றும் உற்சவருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ செல்லியம்மன் ஆலயத்திலிருந்து தாய்மார்கள் சீர்வரிசைகள் கொண்டுவரப்பட்டு கணபதி ஹோமத்துடன் மேளதாளத்துடன் மூலமந்திரங்கள் முழங்க அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் சமேத ஸ்ரீ தர்மராஜா சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆலய நிர்வாகிகள் ராமசந்திரன், குழந்தைவேலு, ராமசந்திரன், ஜெயச்சந்திரன், கோபால், தயாளன், ராமதாஸ், ராணி, காஞ்சனா, உமாமகேஷ்வரி, புஜ்ஜி, வசந்தி, சசிகலா, மரகதம் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.




## கராத்தே கலர் பெல்ட் தேர்வில் மாணவர்கள் சாதனை பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது

வண்டலூர் ஏப். 04-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அருகே நடைபெற்ற கராத்தே கலர் பெல்ட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டும் விழா சிறப்பாக நடைபெற்றது. டிராகன் இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆஃப் கராத்தே சார்பாக நடத்தப்பட்ட இந்த தேர்வில் பல மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக, வி.வி. நெக்ஸ்ஜென் இன்டர்நேஷனல் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றனர். இதனைத் தொடர்ந்து, அப்பள்ளியின் நிறுவனர் திருமதி ஏ.ஜெயகுமாரி அவர்கள், மாணவர்களின் சாதனையை பாராட்டி அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார். மாணவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து மேலும் உயரங்களை அடைய வேண்டும் எனவும் அவர் ஊக்கமளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் டிராகன் கராத்தே பள்ளியின் தலைமை பயிற்சியாளர் மாஸ்டர் ரென்ஷி எம்.இ.இந்திரன் அவர்கள் கலந்து கொண்டு, மாணவர்களின் திறமை மற்றும் ஒழுக்கத்தை பாராட்டினார். மேலும், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களும் மாணவர்களின் வளர்ச்சிக்கு பெருமை தெரிவித்தனர்.

மாணவர்களின் கடின உழைப்பு, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பு இந்த தேர்வில் தெளிவாக வெளிப்பட்டது. அவர்களின் முயற்சியை பாராட்டும் வகையில் விழா சிறப்பாக நடைபெற்றது.

கராத்தே போன்ற ஒழுக்கத்தை வளர்க்கும் கலைகளில் மாணவர்கள் அதிகம் ஈடுபடுவது அவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு உதவிகரமாக இருப்பதாக நிகழ்ச்சியில் பேசப்பட்டது.

வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

## தாராபுரம் தொகுதியில் அதிமுக வேட்பாளர் சத்தியபாமா அறிமுகம் வளர்ச்சி பணிகள், தேர்தல் வாக்குறுதிகள் குறித்து எஸ்.பி. வேலுமணி பேச்சு



திருப்பூர், ஏப்.4-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதிக்கான அதிமுக வேட்பாளர் அறிமுக கூட்டம் உடுமலை சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு எஸ்.பி வேலுமணி தலைமையேற்றார். முன்னாள் அமைச்சர்கள் கே.வி. ராமலிங்கம், உடுமலை ராதாகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் அதிமுகவின் தலைமையில் இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த பாமகபாஜக அமமுகதமாகதமிழக மக்கள் முன்னேற்ற கழகம் ஜனதாதளம். லோக் ஜன் சக்தி கட்சி, புரட்சி பாரதம், ஐஜேகே. உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எஸ்.பி. வேலுமணி பேசுகையில்,

தாராபுரம் பகுதியில் அதிமுக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகளை நினைவுபடுத்தினார். புதிய பேருந்து நிலையம் அருகே மேம்பாலம் அமைத்தது, ஒட்டன்சத்திரம் ரூ திருப்பூர் அவிநாசிபாளையம் வரை நான்கு வழிச் சாலை அமைத்தது, குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தியது போன்ற பணிகள் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

இம்முறை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுச்சாமியின் மனைவியும், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவராக இருந்த சத்தியபாமா அதிமுக வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். அவர் வீடு தோறும் சென்று வாக்காளர்களை சந்திக்க உள்ளதாகவும், கட்சி நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும், தற்போதைய ஆட்சியில் பல மேம்பாட்டு திட்டங்கள் முன்னேற்றம் காணவில்லை என்று விமர்சித்த அவர், மக்கள் நலன் மையமாக அரசியல் செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார். அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், குடிநீர், சாலை, வடிகால், மருத்துவம், வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் விரைவான முன்னேற்றம் ஏற்படும் என்றார்.அத்துடன், அதிமுக பொதுச்செயலாளர் Edappadi K. Palaniswami அறிவித்த தேர்தல் வாக்குறுதிகளையும் அவர் எடுத்துரைத்தார். குடும்பத் தலைவியருக்கு மாதம் ரூ.2,000 நிதியுதவி, முதியோர் ஓய்வூதிய உயர்வு, விவசாய மற்றும் கல்விக் கடன்களுக்கு தளர்வு, ரேஷன் அட்டையாளர்களுக்கு கூடுதல் நலத்திட்டங்கள், தொழிற்துறை முதலீடுகள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்தல், நகர்ப்புற வளர்ச்சிக்கு சிறப்பு திட்டங்கள், அடிப்படை வசதிகள் மேம்பாடு, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்கள் உள்ளிட்டவை வாக்குறுதிகளில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் 1000 பேர் கலந்து கொண்டனர். தேர்தல் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 130நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளபட்டிசோழவந்தான் சாலையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அருகில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப் உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் திமுக நகரக் கழகத்தின் சார்பில், பூத் எண் 287 உட்பட்ட கழக நிர்வாகிகளுடன் முன்னாள் நகரக் கழக செயலாளரும், மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு அமைப்பாளருமான ஜே.கே.எஸ். சாஜித் தலைமையில், மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றிச் சின்னமான "கை" சின்னத்திற்கு வீடு வீடாகச் சென்று உற்சாகமாக வாக்கு சேகரித்தனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியம், எருமாம்பட்டி ஊராட்சி கூரம்பட்டி கிராமத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ., கிராமங்கள் தோறும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் மகேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பெரியசாமி உள்ளிட்ட எருமாம்பட்டி ஊராட்சி திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் திமுக நகர கழகம் சார்பில் நகர செயலாளர் ஜே கே எஸ் பாபு தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளருக்கு காவேரிப்பட்டினம் நகர் பகுதி முழுவதும் வீதி வீதியாக சென்று நிர்வாகிகளுடன் "கை" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர் பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம்



உதகை ஏப்.4-

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு, நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல் 2026ஐ முன்னிட்டு, நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், சிவிஜில் செயலியில் பெறப்படும் புகார்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்களாக கருதப்படும் பதாகைகள், சுவரொட்டிகள் போன்ற புகார்களுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள் மூலம் அகற்றவும், பணம் மற்றும் பரிசு பொருட்கள் போன்ற புகார்களுக்கு பறக்கும் படையினர் மூலமாகவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அடிப்படை வசதிகளான சாய்வுதளம், குடிநீர், கழிப்பறை, மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் இருப்பதை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, உறுதி செய்ய வேண்டும். சுவித்தா செயலி மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு, அனுமதி அளித்த விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிரச்சார பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதனையும் கண்காணிக்க வேண்டும்.

மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, வனத்துறை உதவியுடன் பழங்குடியினர்கள் மற்றும் தேயிலை தோட்டத்தொழிலாளர்கள் வாக்குப்பதிவு நாளன்று, எளிதாக வாக்குச்சாவடிக்கு சென்று வாக்குப்பதிவு மேற்கொள்ளும் வகையில், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மூலம், போக்குவரத்து வசதிகள் செய்து தர வேண்டும். இளம்வாக்காளர்கள் மற்றும் அவசியம் குறித்து, விழிப்புணர்வு கல்விக்குழுவில் உள்ள மாணவ, என மாவட்ட தேர்தல் அலுவலர் / வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் மேற்கொள்ளும் வகையில், தேர்தல் மாணவியர்களை ஈடுபடுத்த வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் கட்டுப்பாட்டு அறை பொறுப்பு அலுவலர் /மாவட்ட வருவாய் அலுவலர் (ஜென்மம் நிலங்கள்) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோக நாயகி மற்றும் அனைத்து பொறுப்பு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## காளையார்கோவிலில் புனித அருளானந்தர் ஆலயத்தில் ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலியில் பாதம் கழுவும் திருநிகழ்வு

காளையார்கோவில், ஏப்.4-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயத்தில் பெரிய வியாழனை முன்னிட்டு ஆண்டவரின் இராவுணவுக் கூட்டு சிறப்பு திருப்பலி ஆனந்தா அரங்கத்தில் அருள்தந்தை பிரான்சிஸ் சேவியர் பங்குத்தந்தை சேசு உதவிப் பங்குத்தந்தை நிக்கோலாஸ் தலைமையில் நடைபெற்றது. இயேசு கிறிஸ்து தம்மையே தாழ்த்தி சீடர்களின் பாதங்களை கழுவி முத்தம் கொடுத்ததுபோல பாதம் கழுவும் திருச்சடங்கு சிறப்பாக நடைபெற்றது. இத்திருப்பலியை குடும்ப நலவாழ்வு பணிக்குழு உறுப்பினர்கள் சிறப்பித்தனர். அதை தொடர்ந்து நற்கருணை கொண்டாட்டமும் நற்கருணை இடமாற்ற பவனியும் தொடர் ஆராதனையும் நடைபெற்றது.



## "100% வாக்களிப்போம்" - தேர்தலை முன்னிட்டு ரஜினி ரசிகர்கள் உறுதிமொழி

மதுரை, ஏப். 4-

மதுரை மாநகர் மாவட்ட ரஜினி ரசிகர் மன்ற துணை செயலாளரும் பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரருமான அழகர் இல்ல விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ரஜினி ரசிகர் மன்ற நிர்வாகிகள் பாலதம்புராஜ் ஓய்வு பெற்ற ஏடிஎஸ்பி குமரவேல் கோல்டன் சரவணன் நமச்சிவாயம் உட்பட ரஜினி ரசிகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ரஜினி மன்ற நிர்வாகிகள் மற்றும் ரசிகர்கள் இணைந்து, 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் அனைவரும் தங்களது ஜனநாயக கடமையை மறவாமல் நிறைவேற்ற வேண்டும் என உறுதி மேற்கொண்டனர்.

இதனை முன்னிட்டு, மதுரை பாண்டி கோவில் பகுதியில் காவல் தெய்வமாக விளங்கும் பாண்டி முனீஸ்வரருக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு, பொதுமக்களிடையே வாக்கு பதிவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.



## தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள பூண்டிமாதா பேராலயத்தில் பெரிய வியாழன் கொண்டாடப்பட்டது

தஞ்சாவூர், ஏப்.4-

திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள பூண்டிமாதா பேராலயம் கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் புனித தலங்களான பசிலிக்காக்களில் ஒன்றாகும்.

இங்கு ஆண்டு தோறும் பெரிய வியாழன் சிறப்பாக கொண்டாடப்படும். இயேசு கிறிஸ்து இறப்பதற்கு முதல் நாள் தன் சீடர்களுக்கு பிரியாவிடை கூறினார். தான் பங்கு கொண்ட இறுதி இரவு உணவில் தன் சீடர்களுடன் என்றும் இருக்கும் அளவில் கோதுமை அப்பத்தை தன் உடலாகவும், திராட்சை ரசத்தை தன் ரத்தமாகவும் மாற்றி தந்தார்.தான் உணவை உண்பதற்கு முன்பாக ஒரு அடிமை போல தன் சீடர்களின் பாதங்களை கழுவினார். இதனால் சீடர்கள் ஒருவரை ஒருவர் பணிவுடன் ஏற்று அன்புடன் வாழவேண்டும் என்று பாடமாக சொல்லித்தந்தார்.

இதனை நினைவு கூறும் வகையில் பூண்டிமாதா பேராலயத்தை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து 12 பெரியவர்களை தேர்வு செய்து பெரிய வியாழன் நிகழ்ச்சியில் பூண்டிமாதா பேராலய அதிபரும் பங்குத் தந்தையுமான பி.ஜெ. சாம்சன் அவர்களின் பாதங்களை கழுவி முத்தமிட்டார்.

இயேசு தன் உடலையும், ரத்தத்தையும் தன்சீடர்களுக்கு அளித்த அந்த தியாக செயலை நினைவு கூறும் வகையில் இரவு 12 மணிவரை நற்கருணை ஆராதனைகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியில் துணை அதிபர் ஜெ.ரூபன்அந்தோணிராஜ், பூண்டிமாதா தியான மைய இயக்குநர் எஸ். ஆல்பர்ட் சேவியர், உதவித் தந்தைகள் எம்.செல்வகுமார், எஸ்.அருள்லாரன்ஸ், ஆன்மீகதந்தை பி.ஜோசப் மற்றும் பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் களம்: மானாமதுரையில் கனிமொழி எம்பி அதிரடிப் பரப்புரை தமிழரசி ரவிக்குமாருக்கு ஆதரவு திரட்டல்

மானாமதுரை ஏப்.04-

தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று முன்தினம் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து அதிகாரப்பூர்வமாகத் தொடங்கினார்.

வேட்பாளர் அறிமுகம் மற்றும் ஆதரவு

மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் தற்போதைய உறுப்பினரும், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலின் வேட்பாளருமான தமிழரசி ரவிக்குமாரை ஆதரித்து கனிமொழி எம்பி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். திறந்த வெளி வாகனத்தில் நின்றபடி மக்களிடையே உரையாற்றிய அவர், தமிழரசி ரவிக்குமாரின் தொகுதிப் பணிகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.



திராவிட மாடல் அரசின் சாதனைகள்

தனது உரையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செய்த சாதனைகளை கனிமொழி எம்பி பட்டியலிட்டார். குறிப்பாக, மானாமதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்ட முக்கியத் திட்டங்களை அவர் சுட்டிக்காட்டினார்:

* கண்மாய்கள் சீரமைப்பு: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம், கட்டிகுளம், மிளகானூர் உள்ளிட்ட பகுதிகளில் ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் கண்மாய்கள் சீரமைக்கப்பட்டன.

* வைகை ஆற்றில் அணைக்கட்டு: கீழப்பசலை மற்றும் இதர கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 16.86 கோடி செலவில் அணைக்கட்டு கட்டித் தரப்பட்டுள்ளது.

* நீர்ப்பாசனத் திட்டங்கள்: மானாமதுரை நாட்டார் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

* புதிய உட்கட்டமைப்பு: ரூ. 12.38 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* கல்வி மற்றும் வேலைவாய்ப்பு: மானாமதுரையில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு தொழிற் பயிற்சி மையம் (மிஜிமி) மற்றும் அரசு கலைக் கல்லூரி கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலன் மற்றும் நிதி உதவி

பெண்களுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்துப் பேசிய அவர், தேர்தல் நேரத்தில் பிஜேபி அரசு இந்த நிதியைத் தடுக்க முயல்வதாகக் குற்றம் சாட்டினார். இருப்பினும், கோடைக்கால நிவாரணமாக கூடுதலாக ரூ. 2000 சேர்த்து மொத்தம் ரூ. 5000 வரை பெண்களின் வங்கிச் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளதை அவர் நினைவு கூர்ந்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு சவால்

தமிழகத்தில் பாஜக தலைமையிலான கூட்டணிக்கு எதிராக ஒரு தார்மீகப் போர் நடப்பதாகக் குறிப்பிட்ட கனிமொழி எம்பி, "இது கீழடிக்கும் நாக்பூருக்கும் இடையிலான போர்" என்று வர்ணித்தார். தமிழகத்தின் உரிமைக்காகவும், திராவிட இயக்கத்தின் வெற்றிக்காகவும் மக்கள் திமுக கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பரப்புரை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். கனிமொழியின் வருகையையொட்டி மானாமதுரை நகரம் முழுவதும் திமுக கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பாபா மெட்ரிக் பள்ளியில் 202526 கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு விடைபெறுதல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.இந்நிகழ்ச்சியை முன்னிட்டு பள்ளியின் நிறுவனர் இராஜேஸ்வரி அம்மா,தாளாளர் ஸி. கபிலன், மற்றும் பள்ளி நிர்வாகி .ஸி. மீனாட்சி கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினர். நிகழ்ச்சியில் மாணவர்களுக்காக பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், பள்ளியின் முதல்வர் வி. சாரதா மாணவர்களுடன் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார். இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர். கடந்த 12 ஆண்டுகளாக தங்களது குழந்தைகளை பாபா மெட்ரிக் பள்ளியில் கல்வி கற்க வைத்த பெற்றோர்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறந்த மாணவர்களாக உருவாக்கியமைக்காக பள்ளி நிர்வாகத்திற்கு நன்றி செலுத்தியும், ஆசிரியர்களைமகிழ்ச்சியுடன் வாழ்த்தியும் சென்றனர். மாணவர்களுக்கு மறக்க முடியாத நினைவாக இந்த விடைபெறுதல் நிகழ்ச்சி நமது பாபா மெட்ரிக் பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.





## திமுக சட்டமன்ற வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம் அலுவலகத்தில் காரியாலயம் கால் கோல் விழா பூமிபூஜை விழா

போடிநாயக்கனூர் ஏப்.04-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி; திமுக சட்டமன்ற வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம் அலுவலகத்தில் காரியாலயம் கால் கோல் விழா பூமிபூஜை விழா வெகு சிறப்பாக நடைபெற்றதை தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் திமுக வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ளிறி., ரவீந்திரநாத் ஆகியோர் தலைமையில் நகர் கழக செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடிநாயக்கனூர் இளைய ஜமீன்தார் திரு முத்து ராஜபாண்டியன் லட்சுமணன், முன்னாள் நகர் மன்ற தலைவர் க்ஷிஸி பழனிராஜ், சங்கர், ஆசிப்கான், மணிகண்டன், அங்குவேல், குருமணி, குருவு, ஜெயராம் பாண்டியன், பாஸ்கரன், கலையரசி முருகன், முருகன், ஆகியோர்கள் முன்னிலையில் திமுகவின் காரியாலயம் கால் கோள் விழா இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது..

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சதாசிவம், கண்ணன், திருநாவுக்கரசு மற்றும் கூட்டணி கட்சியினர் கழகத் தொண்டர்கள் சமுதாய பெரியோர்கள் பெண்கள் அணி திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

## மதுரை மாநகர காவல்துறையின் புதிய காவல் ஆணையராக அபிஷேக் தீக்க்ஷித் ஐ பி எஸ் பொறுப்பேற்றுக் கொண்டார்

மதுரை, ஏப்.4-

மதுரை மாநகர காவல்துறையின் புதிய காவல் ஆணையராக அபிஷேக் தீக்க்ஷித் ஐ பி எஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். உத்திரப் பிரதேசத்தை பூர்விகமாகக் கொண்ட இவர், 2006ஆம் ஆண்டு தமிழக கேடரில் இணைந்த ஐபிஎஸ் அதிகாரி ஆவார்.



காவல்துறையில் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இதற்கு முன்பு, சென்னை நகரில் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு பிரிவு ஐஜியாக பதவி வகித்திருந்தார்.

புதிய காவல் ஆணையராக பொறுப்பேற்றுள்ள இவரின் வழிகாட்டுதலில், மதுரை மாநகர காவல்துறையின் செயல்பாடுகள் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேம்பார் நடுநிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம்

காளையார் கோவில் ஏப்.04-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டமும் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர்(பொறுப்பு) சுரேஷ் தலைமை ஏற்றார். பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சிகளை மிக சிறப்பாக ஏற்பாடு செய்த தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. பள்ளி ஆண்டுவிழா வரவு செலவு விவரங்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பள்ளி ஆண்டு விழா மிக சிறப்பாக நடைபெற உதவியை



பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆண்டு விழாவிற்கு நன்கொடை வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தலைமை ஆசிரியர் சுரேஷ், வரும் கல்வி ஆண்டில் ஆறு, ஏழு மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கு திறன் அடிப்படையில் தேர்வு நடைபெறும் என்றும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் திட்ட முறையில் தேர்வுகள் நடைபெறும் என்று விளக்கி கூறினார். மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாசிப்பு திறன் மேம்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. 2026 2027 கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை எல்கேஜி முதல் எட்டாம் வகுப்பு வரை மார்ச் 1ஆம் தேதி முதல் நடைபெறுகிறது என்று விவரம் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இடைநிற்றல் இல்லாமல் அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க பள்ளி மேலாண்மை குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இடைநிலை ஆசிரியர் முருகன் நன்றியுரை கூறினார். பள்ளி மேலாண்மை குழு தலைவி டேவிட் அருள் ஷாலினி துணைத் தலைவி ஜெயா பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவி ஆரோக்கிய ரோஸியா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்கள் காளீஸ்வரன் ,முத்துக்குமார், முருகன் ,சகாய செல்வி, பாரதி மலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161